திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவ மனைகளில் மின்சார விளக்கு பொருத்துவது சம்பந்தமான முக்கியமான கேள்வி இது. நான்கூட தஞ்சாவூரில் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன், ஒருவரைப் பார்ப்பதற்கு. 8 மணியிலிருந்து 9 மணி வரையில் மின்சாரம் நின்றுவிட்டது, மாத்திரை பெறக்கூடியவர்கள், ஊசி போடப்படுகிறவர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரசு மருத்துவமனைகள் சம்பந்தப்பட்ட கேள்வி. மின்சாரம் ஊர் பூராவும் சில சமயங்களில் தடைபடுகிறது என்றால் அதைப்பற்றி இந்த அமைச்சர் பதில் சொல்ல முடியாது. அது வேறு.

மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதியை

உயர்த்தும் திட்டம்.

* வினா எண். 53—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடி அரசினர் மருத்துவ மனையின் தகுதி நிலையை உயர்த்தக் கோரி 14—7—1980 அன்று அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மன்னார்குடி அரசினர் மருத்துவமனையின் தகுதியை உயர்த்தக்கோரி கீழ்க்கண்ட விஸ்தரிப்பு வேலைகள் அம்மருத்துவ மனைக்குத் தேவையென்று குறிப்பிட்டு 14—7—80-ம் நாளிட்ட சட்ட மன்ற உறுப்பினர் திரு. அம்பிகாபதியின் கடிதம் மருத்துவப் பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநருக்கு வந்துள்ளது.

(1) குடும்ப நல அறுவை சிகிச்சை அரங்கு.

(2) குடும்ப நல அறுவை சிகிச்சைக்கான 12 படுக்கைகள் கொண்ட அரங்கு

(3) காச நோய் உள் நோயாளிகள் பகுதி

(4) பால்வினை நோய் பகுதி

(5) 'சி' வகுப்பு தனி நோயாளிகள் பகுதி

இவைகள் வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி தாலுகா விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்து வாழுகின்ற பகுதி. தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகமாக குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடைபெறுவது மன்னார்குடி மருத்துவமனையிலேதான். ஒரு நாளைக்கு ஆயிரம் பேர்கள் வெளி நோயாளிகளாக வந்துபோகிறார்கள். இவ்வளவு ஜனநெருக்கம் மிக்க அந்த மருத்துவ மனைக்கு சிறந்த முறையில் இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதற்காக 25—7—81 அன்று நம்முடைய ஹெல்த் டிபார்ட்மெண்டிலிருந்து மத்திய அரசுக்கு — நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கடிதம் எழுதிய பிறகு அதன் தொடர்ச்சியாக — நாம் ஒரு கடிதத்தை எழுதியிருக்கிறோம். போஸ்ட்பார்ட்டம் பிரிவு, பேமிலி பிளானிங் அறுவை சிகிச்சைக்கு உதவியாக ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கேட்டு, போஸ்ட்பார்ட்டம் எல்லைக்குள் கொண்டுவரப்படவேண்டுமென்று கேட்டு எழுதியிருக்கிறோம். விரைவிலே பதில் வரும் என்று நினைக்கிறேன்.

கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 54— திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி அரசினர் மருத்துவ மனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் திட்டம் 1982-83 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும்.

போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் தொழிற்சங்கங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடம்

* வினா எண். 55—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திலுள்ள போக்குவரத்துக் கழக கட்டிடங்களில் தொழிற்சங்கங்களுக்காக இடம் கொடுக்கப்பட்டுள்ளத ?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களுக்கு எங்கெங்கு இடம் கொடுக்கப்பட்டுள்ளது?